# ஸ்ரீலங்கா கடற்படை படகுகளில் புதியரக ரேடார் கருவிகள்

வடபகுதிக் கடலில் ரோந்து புரியும் ஸ்ரீலங்கா கடற்படையினர் படகுகளைக் கண்டு பிடிக்கும் புதிய ரேடார் கருவிகளைக் கொள்வனவு செய்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இக் கருவிகள் மூலம் பல மைல்களுக்கு அப்பால் வரும் படகுகளைத் துல்லியமாக கண்டு கொள்ள முடியும் எனக் கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். முன்னர் இஸ்ரேலிய தயாரிப்பு ரேடார் கருவிகளையே ஸ்ரீலங்கா கடற்படை உபயோகித்ததாகவும் தற்போது பிரிட்டிஷ் தயாரிப்பு ரேடார்களையே அதிகமாக உபயோகிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை பீரங்கிப்படகுகளிலும் தூர இலக்கு உடைய பீரங்கிகள் புதிதாகப் பொருத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.


பக்கங்கள் நான்கு விலை ரூபா 4-50

முரசொலி

முரசு 05 ஒலி 110 பிரமோதூத பங்குனி 03 (17-03-1991) ஞாயிறு


## சுகமாக கப்பலில் வந்தவருக்கு இறங்கும் போது கால் முறிந்தது

கொழும்பில் சிகிச்சை அளிக்கப்பட்டு யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்ட நோயாளி ஒருவர் கால் முறிந்து மீண்டும் நோயாளியானார். நேற்றுப்பருத்தித்துறை வந்து சேர்ந்த 'குமனே' கப்பலிலிருந்து இறங்கும் பொழுது கால் தடக்கி கப்பற் தளத்தில் விழுந்து இவருடைய காலில் முறிவு ஏற்பட்டது. இக் கப்பலில் சுமார் 20 நோயாளர்கள் சிகிச்சை அளிக்கப்பட்டபின் கொழும்பில் இருந்து அழைத்துவரப்பட்டனர். பலத்த சிரமத்தின் மத்தியில் இந்த நோயாளி கொழும்பு சென்று சுகமாக வீடு திரும்பும் போது இச் சம்பவம் நிகழ்ந்தது குறித்து அவரது உறவினர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (70)

★ ஆயுதப்படை நடவடிக்கைகளில்

# கிழக்கில் காணாமற் போனோர் குறித்து விசாரிக்க ஆதாரம் இல்லை!

## உயர் நீதிமன்றத்தில் 3000 பேர் தொடர்பாக மனு

காணாமற் போனவர்கள் தொடர்பாக ஸ்ரீலங்கா வழக்கறிஞர்கள் சங்கத்தின் சட்ட உதவிப் பிரிவு ஆயிரம் ஆட்கொணர்வு மனுக்களை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளது.

கடந்த பெப்ருவரி இறுதி வரை தெற்கில் காணாமல் போனோரின் குடும்பத்தினரிடமிருந்து 3007 முறைப்பாடுகள் கிடைத்ததாகவும்— அவற்றுள் ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகளுக்கு போதிய ஆதாரங்கள் இருப்பதாகவும் சங்கத்தின் திட்டமிடல் அதிகாரி தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் இருந்து ஆகக்கூடிய தொகையான 842 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. ஆனால் கடத்தியவர்களைப் பற்றிய தகவல்கள் எதுவுமே இல்லாததால் இவை பற்றி எதுவும் செய்வதற்கு இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

கிழக்குக்கு அடுத்தபடியாக மத்திய மாகாணத்தில் இருந்து கிடைத்துள்ள 654 முறைப்பாடுகளில் பெரும்பாலானவற்றுக்கு ஆதாரங்கள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மத்திய மாகாணத்தில் உள்ள 'மலிக்கின்ஸ்' யே அதிகம்பேரை பறிகொடுத்த ஒரு தனிக்கிராமமாகும்.

பெரும்பாலான முறைப்பாடுகளின்படி காணாமற் போனவர்கள் தத்தம் வீடுகளில் இருந்து இனம் தெரியாத ஆயுதம் தாங்கிய

— 4 ஆம் பக்கம் பார்க்க

## மனித உரிமை மீறல் வழக்கில் அரசுக்கு எதிராகத் தீர்ப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆதரவாளர்கள் இருவரது மனித உரிமை மீறல் மனுவை உயர் நீதிமன்றம் ஏற்றுத் தீர்ப்பு வழங்கியுள்ளது.

களுத்துறை தேர்தல் தொகுதியைச் சேர்ந்த ஜே. எம். சோமசிறி கே. டீ. சோமசிறி ஆகிய இருவரையும் தமது அரசியற் பணிகளைச் செய்ய விடாது தடுத்து வைத்ததாக மூன்று பொலிஸ் அதிகாரிகள் அப்போதைய உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் ரைப் பிட்டிய சட்டமா அதிபர் ஆகியோர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

1988 இல் இரத்தினபுரி (இடைத்தேர்தலின் போது பிரசாரம் செய்யப் போன போது இந்த இருவரையும் கைது செய்து தடுத்து வைத்ததாகவும், இதனால் அவர்கள்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## பலாலி முகாம் ஷெல் தாக்கு

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்றுக்காலை 6 மணி முதல் வல்லை வெளியை நோக்கி கடும் ஷெல் தாக்குதல் நடைபெற்றது. (71)

## தமிழ்க்குழுக்கள் - இந்திய தூதுவர்

## வடக்கே மரக்கறி விலை வீழ்ச்சி விவசாயிகள் கவலை

வடபகுதியில் மரக்கறி வகைகளின் விலைகள் பெரும் வீழ்ச்சியடைந்து வருவதால் விவசாயிகள் பெரிதும் கவலையடைந்துள்ளனர்

மரக்கறி வகைகள் யாவும் கிலோ 10 ரூபாவுக்கு குறைவாகவே விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

குறிப்பாக கோவா கிலோ 5 ரூபாவாக விற்பனை செய்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## உபஉணவு உற்பத்தியில் கூட்டுறவுச் சங்கங்கள்

உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகியன உப உணவு உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன.

உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் உப உணவு உற்பத்தி மூலம் அறுவடை செய்த மரக்கறி வகைகளை தனது சங்கக் கிளைகள் மூலம் விற்பனை செய்து வருகின்றது.

பருத்தித்துறை பல நோக்குச் கூட்டுறவுச் சங்கமும் உப உணவுற்பத்தியில் ஏற்கனவே ஈடுபட்டமை தெரிந்ததே. (50

## பத்து மீனவர்களை கடற்படை பிடித்துச் சென்றது

வடமராட்சி கிழக்கு கடற் பிரதேசத்தின் கரையோரப் பகுதியிலே மணித்தியாலத்திற்கு ஒன்று என்ற விகிதத்தில் கடற்படைப் படகு அங்கும் இங்கும் ஓடித்திரிகின்றது.

சில இடங்களில் குடிமனைகளை நோக்கி பீரங்கித்தாக்குதல்களை மேற்கொள்கின்றன.

இதேவேளை கடற்படையினரால் பிடிக்கப்பட்ட உடுத்துறையைச் சேர்ந்த பத்து குடும்பத்தவர்களில் மூவர் தற்போது திருமலை கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் நம்பத்தகுந்த தகவல்கள் கிடைத்துள்ளன. (43)

களுத்துறை தேர்தல் தொகுதியைச் சேர்ந்த ஜே. எம் சோமசிறி கே. டீ சோமசிறி ஆகிய இருவரையும் தமது பிட்டிய சட்டமா அதிபர் ஆகியோர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

1988 இல் இரத்தினபுரி

— 4 ஆம் பக்கம் பார்க்க

தல் நடைபெற்றது. (71)

ஓடித்திரிகின்றது.

சில இடங்களில் குடிமனைகளை நோக்கி பீரங்கித் தாக்குதல்களை மேற் கொள்கின்றன.

போது திருமலை கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் நம்பத்தகுந்த தகவல்கள் கிடைத்துள்ளன. (43

## படகு மீது கடற்படை தாக்கு இருவரைக் காணவில்லை

வடமராட்சி கிழக்கு கடற் பிரதேசத்தில் மேலும் ஒரு படகு கடற்படையினரின் தாக்குதலுக்கு உள்ளான சம்பவம் கடந்த வியாழன் இடம் பெற்றது. இப்படகில் சென்ற மூவரில் ஒருவர் நீந்திக் கரைசேர்ந்துள்ளார். ஏனைய இருவருக்கும் படகுக்கும் என்ன நடந்தது என்று தெரியவில்லை

— 4 ஆம் பக்கம் பார்க்க

## தமிழ்க்குழுக்கள் - இந்திய தூதுவர் கொழும்பில் பேச்சுவார்த்தை

கொழும்பில் ஐந்து தமிழ்க் குழுக்களுடன் இந்தியத் தூதுவர் என். என். ஜா பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார். நேற்று முன்தினமும் நேற்றும் பேச்சுகள் நடைபெற்றன.

தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண இக்குழுவினர் ஒருமித்த கருத்துக்கு வரவேண்டும். பிரச்சினைக்கான தீர்வை ஸ்ரீலங்கா அரசிடம் சமர்ப்பிக்குமாறும். இந்திய தூதுவர் ஜா இவர்களுக்கு ஆலோசனை வழங்கினாராம்.

இவர்களின் சந்திப்பு இந்திய தூதரகத்தில் நடைபெற்றதாகவும் பேச்சுகள் சுமூகமான முறையில் நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## முல்லைத்தீவு கடலிலிலும் கடற்படையினர் தாக்குதல்

முல்லைத்தீவு கடற் பிராந்தியத்தில் கடற்படையினரின் அட்டகாசம் அதிகரித்து வருவதாகவும் இதனால் மீனவர்கள் இரை பலியாகியுள்ளதாகவும்.

கடந்த சில வாரங்களாக இப்பகுதியில் கடற்படையினரின் நடமாட்டம் வழமையை விட மோசமாகியுள்ளது.

மீனவர்கள் அண்மூடித்தன

— 4 ஆம் பக்கம் பார்க்க

## ஆனையிறவு இராணுவம் அடிக்கடி ஷெல் தாக்குதல்

கொம்படிவெட்டை, ஊரியான் பாதை ஆகியவற்றினூடாக பிரயாணம் செய்யும் பயணிகளை நோக்கி ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து "ஷெல்" தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதேவேளை இரவு நேரத்தில் "பரா" வெளிச்சத்துடன் குடியிருப்புப் பகுதிகளை

— 4 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு கிழக்குப் பகுதிக்கு ஜனசக்தி கிடைக்காது?

வடக்கு கிழக்கு மாகாணங்களில் 'ஜனசக்தி' கொடுப்பனவுகள் 15-10-90 முதல் நிறுத்தப்பட்டுள்ளது: அதே போல உணவு முத்திரைகளுக்கும் 4வது புள்ளிக்கு பொருள் விநியோகம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது நிறுத்தப்பட்டது.

கடந்த வாரம் உணவு முத்திரை வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு 6வது 7வது புள்ளிகளுக்கு பொருள் வழங்

— 4 ஆம் பக்கம் பார்க்க

### மதிய உணவு முத்திரைக்கு

## நல்லூர் ப. நோ. கூ. சங்கம் பொருள்களை நேரில் வழங்கும்

யாழ் நகர்ப்பகுதி உயர் பாடசாலை மாணவர்களின் மதிய உணவு முத்திரைக்குரிய பொருள்களை அந்தந்த பாடசாலைகளிலேயே வைத்து வழங்க நல்லூர் பல நோ. கூ. சங்கம் தயாராக உள்ளது.

மதிய உணவு முத்திரைக்குரிய பொருள்களைப் பெறுவதில் ஏற்பட்டுள்ள சிரமங்கள் பற்றி "முரசொலி"யில் வந்த செய்தி தொடர்பாக இச் சங்கத்தின் தலைவர் திரு. பெ. கனகசபாபதி

— 4 ஆம் பக்கம் பார்க்க

## இரணைதீவில் பிடிக்கப்பட்டவர் தள்ளாடியில் விடுதலை

இந்தியாவிலிருந்து கடந்த தை மாதம் 26 ஆம் திகதி படகில் வரும்போது இரணைதீவுக்கடலில் வைத்து தலைமன்னார் கடற்படையினரால் பிடிக்கப்பட்ட பத்துப்பேரும் தள்ளாடி இராணுவ முகாமில் வைத்து விடுவிக்கப்பட்டனர்.

தலைமன்னார் முகாமில் வைத்து தமிழ்க்குழு ஒன்றினாலும் படையினராலும்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## தரைமார்க்கமாக தபால்கள் வரும்?

கொழும்பிலிருந்து வடபகுதிக்கான தபால்களை தரை மார்க்கமாகக் கொண்டுவர கொழும்பில் ஏற்பாடுகள் செய்யப்படுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போது கப்பலில் இவை வருவதால் தாமதம் ஏற்பட்டு

— 4 ஆம் பக்கம் பார்க்க

## வீரமரணம்

ஆனையிறவில் நேற்று முன்தினம் நடந்த மோதலில் காயமடைந்த அலன் வீரமரணமடைந்தார். இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (71)

# பல அரச நிறுவனங்கள் மக்கள்மயமாகின்றன!

## உலகவங்கி வற்புறுத்தலின் எதிரொலி!!

அரசாங்கம் மேலும் பல கூட்டுத்தாபனங்களையும், சபைகளையும் மக்கள் மயப்படுத்த உத்தேசித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு ஏதுவாக சகல கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளின் விலை மதிப்பீடுகளை உடனடியாகத் தயாரித்து வழங்குமாறு அரசு விலை மதிப்புத் திணைக்களத்தைப் பணித்துள்ளது.

இப்பணிப்புரைக்கேற்ப சில கூட்டுத்தாபனங்களின் மதிப்பீட்டு வேலைகள் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி என்பவற்றின் ஆலோசனைக்கமையவே கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளை மக்கள் மயப்படுத்தும் நடவடிக்கை தொடர்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை அரசு மேற்குறிப்பிட்ட வங்கிகளிடம் வரையறையற்ற நிபந்தனைகளின் பேரில் மிகக் கூடுதலான அளவில் கடன்களைப் பெற்றுள்ளதினால் அவை விதிக்கும் நிபந்தனைகளை அரசு ஏற்க வேண்டிய நிலைக்கு உள்ளாகியுள்ளதாகப் பொருளியல் நிபுணர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

ஏற்கனவே போக்குவரத்துச் சபை உட்பட பல சபைகளும் கூட்டுத்தாபனங்களும் அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களும் மக்கள் மயப்படுத்தப்பட்டுள்ளமை தெரிந்ததே. (ப-1)

## செய்திச் சிதறல்கள்

### தொழுநோய் அபாயம்

காரைநகர் பகுதியைச் சேர்ந்த பொன்னாவெளி, தோப்புக்காடு ஆகிய இடங்களில் சுகாதார திணைக்கள அதிகாரிகள் குழு வொன்று அண்மையில் தொழுநோய் பரிசோதனை மேற்கொண்ட போது எட்டுப்பேருக்கு தொழுநோய்க்கான ஆரம்ப அறிகுறிகள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

தொல்புரம் அரசினர் மத்திய மருந்தகத்தில் மாதத்தில் இரண்டாவது திங்கட்கிழமைகளில் நடைபெற்று வரும் தொழுநோய்ச்சிகிச்சை நிலையத்தில் இந்த நோயாளருக்கு சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருவதாக யாழ் மாவட்ட தொழுநோய் தடுப்பு அதிகாரி எம் குணரத்தினம் தெரிவித்தார். (13)

### உரும்பராய் அணி வென்றது

உரும்பராய் செல்வமக்கள் விளையாட்டுக் கழக அணிக்கும், சுன்னாகம் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில், நேற்று முன்தினம், சென்மைக்கல் விளையாட்டுத்திடலில் நடைபெற்ற சிநேக பூர்வ உதைபந்தாட்டப் போட்டியில், உரும்பிராய் சென்மைக்கல் அணி 3:1என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

தொடக்கம் முதல் இறுதி வரை வெகு விறு விறுப்பாக இருந்த இப்போட்டி. இடைவேளை வரையும் இரு அணிகளும் கோல்எதையும் போடாமல் சமநிலையிலேயே இருந்தன.

அதன்பின் சென்மைக்கல் அணி வீரர்கள் வெகு சாதுரியமாக ஆடி ஒன்றன் பின்ஒன்றாக இரு கோல்களைப் போட்டனர், அதனைத் தொடர்ந்து ஒரு கோலைப் போட்ட சுன்னாகம் அணியின் எவ்வளவோ முயன்றும் மேலதிக கோல் எதையும் போட முடியவில்லை.

இப் போட்டிக்கு நடுவராக திரு. எம். பிரான்சின் கடமையாற்றினார். (16)

### நல்லைக் குருமணி பத்தாவது குருபூசை

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளின்

### கல்விப் பகுதி விசேட கூட்டம்

யாழ் கல்வித் திணைக்கள வளவில் உள்ள நல்லூர் கோட்டக் கல்வி ... சிதான சி சி தமிழ்க் கலவன் பாடசாலையில் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஒரு விசேட கூட்டம் நடைபெறவுள்ளது.

புலமைப்பரிசில், க. பொ. த பரீட்சைகள் உட்படப் பல முக்கியமான கல்விச் செயற்பாடுகள் பற்றி இக்கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சகல கொத்தணி அதிபர்களையும் கோட்டக் கல்வி அலுவலர்களையும் இக் கூட்டத்திற்கு தவறாது சமூகமளிக்குமாறு யாழ் கல்விப் பணிப்பாளர் இ.சுந்தரலிங்கம் கேட்டுள்ளார்.

### புதுவருட பொது அறிவுப் போட்டி

கோண்டாவில் மேற்கு வேத பாராயண சனசமூக நிலையம் புத்தாண்டை முன்னிட்டு மாணவர்கள் மத்தியில் பேச்சு, கட்டுரை, பொது அறிவுப் போட்டிகளை நடாத்தவுள்ளது.

ஆரம்ப, மத்திய, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக இப் போட்டி நடக்கவுள்ளது. (52)

### சோமஸ்கந்தாவில் பாராட்டு விழா

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியில் கடந்த 30 வருடங்களாக ஆசிரியராகக் கடமை புரிந்த க. சண்முகரத்தினசர்மா சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார்.

இவர் கல்லூரியில் கடமையாற்றிய காலத்தில் ஆசிரிய சம்மேளனம், கலா மன்றம், சைவ மன்றம் என்பவற்றின் தலைவராகவும் சிறப்பாகப் பணிபுரிந்துள்ளார்,

இவருடன் இக் கல்லூரியில் இருந்து ஓய்வுபெற்ற மற்றும் ஆசிரியர்களான ந பாலசிங்கம், க சிவசிதம்பரநாதன் ஆகியோருக்கும் டி. ராஜா இருஷ்ண பிள்ளை, தாமோதரம்பிள்ளை ஆகிய கல்லூரி ஊழியர்களுக்கும், கல்லூரியிலிருந்து இடமாற்றலாகிச் செல்லும் ஆசிரியர்களான எஸ். தம்பையா, திருமதி ஜே கிருஷ்ணகுமார் ஆகியோருக்கும் கல்லூரியில் சிறப்பான முறையில் சேவைநலன் பாராட்டுவிழா ஒன்று அண்மையில் நடாத்தப்பட்டது.

### சிங்கள மாணவரின் 1980 சாதனையை முரளீதரன் முறியடித்தார்

தென்பகுதி பாடசாலைகளுக்கிடையேயான கிரிக்கட் ஆட்டத்தில் தமிழ் மாணவரான முத்தையா முரளீதரன் புதிய சாதனை ஒன்றை ஏற்படுத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் கண்டி அஸ்கிரிய மைதானத்தில் கண்டி திரித்துவக் கல்லூரிக்கும், புனித அந்தோனியார் கல்லூரிக்கும் இடையே இடம்பெற்ற 75 வது வருடாந்த கிரிக்கட் போட்டியில் புனித அந்தோனியார் கல்லூரி வீரனான இவர் 6 விக்கட்டுக்களைக் கைப்பற்றினார்.

இதன்மூலம் இலங்கைப் பாடசாலை கிரிக்கட் வரலாற்றில் ஒரேபருவகாலத்தில் 121 விக்கட்டுக்களை வீழ்த்தி முத்தையா முரளீதரன் புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

1980 களில் பன்னிபிட்டிய தர்மபால கல்லூரியைச் சேர்ந்த காமினி பெரேரா என்ற மாணவன் 119 விக்கட்டுக்களைக் கைப்பற்றி ஏற்படுத்திய சாதனையை முரளீதரன் முறியடித்துள்ளார். (16)

### புனித பத்திரிசியார்

அறிவும் ஒழுக்கமும் ஆக்கமும் நல்கும்
அறிவா லயத்தின் நலத்தினிற் கலந்த
புனிதராம் பத்தி ரிசியார் விழாவின்
இனிதாய்க் கலப்போம் இணைந்து.

வட்டூர்க் கடம்பன்

(இன்று புனித பத்திரிசியார் நினைவு தினம் சம்பத்திரிசியார் கல்லூரியில் கொண்டாடப்படுகின்றது)

### வாடிக்கையாளரை ஏமாற்றும் நிதிக்கம்பனிகளுக்கு எதிராக நடவடிக்கை

வாடிக்கையாளர்களை ஏமாற்ற முனையும் தனியார் நிதிக் கம்பனிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

பணத்தைக் கையாடும் தனியார் நிதிக்கம்பனி பணிப்பாளர்களுக்கும், முகாமையாளர்களுக்கும் எதிராக நீதிமன்றத்தில் கடும் நடவடிக்கை யெடுக்கவும், மோசடி செய்யப்பட்ட பணத்தைத் திரும்பப் பெறவும் கூடியதாக இந்த நடவடிக்கை அமையவுள்ளது.

### சங்கரத்தை பத்திரகாளி உற்சவம்

வட்டுக்கோட்டை, சங்கரத்தை பிட்டியம்பதி ஸ்ரீபதி

### சதாவதானி நினைவுப் போட்டிகள்

சதாவதானி கதிரைவேற்பிள்ளை குருபூசைத்தினத்தை

### கால்நடைகளுக்கு தடுப்பூசி ஏற்றும் பணி மீள ஆரபம்

சங்கானை கால்நடைவைத்திய அதிகாரி பிரிவில் கோழிகளுக்கு தொற்றுநோய் பரவாது தடுப்பு ஊசிமருந்து ஏற்றும் பணி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாயிலுள்ள சங்கானை கால்நடை வைத்திய அதிகாரியின் அலுவலகத்தில் சனிக்கிழமைகளில் முற்பகலில் இந்த தடுப்பு ஊசிமருந்துகள் போடப்பட்டு வருகின்றன.

அத்துடன் பசுக்களுக்கு செயற்கை முறையில் சினைப்படுத்தல் முறையும் மீண்டும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. (13)

### பாடசாலைகளில் வெண்கட்டிக்குதட்டுப்பாடு; உள்ளூர் உற்பத்தியை அதிகரிக்க முயற்சி

வடபகுதிகளில் தற்போது வெண்கட்டிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை யாழ் முறைசாராக் கல்விப்பகுதி மாணவர்கள் முற்றுமுழுதாக உள்ளூர் மூலப்பொருள்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யும் வெண்கட்டி நல்ல தரமான உற்பத்தியாக அமைந்துள்ளதாக பாராட்டப்பட்டுள்ளது.

அத்துடன் பனையோலைப் பெட்டியினால் இது பொதி செய்யப்படுகின்றது. கட்புல சாதனங்கள் ஆக்கல் பயிற்சி நெறியினை சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் கற்கும் மாணவர்கள் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளும் இவ் வெண்கட்டி உற்பத்தி மூலம் இன்னமும் சில மாதங்களில் குடாநாட்டின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்குமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (30)

### இந்தியாவில் சர்க்கஸ்களில் மிருகங்களைப்பயன்படுத்தத்தடை

இந்தியாவில் சர்க்கஸ்களில் மிருகங்களைப் பயன்படுத்துவதற்கு உடனடியாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

புலி, கரடி, சிறுத்தை, நாய் ஆகிய மிருகங்களைப் பயிற்றுவிப்பதற்கும், காட்சிப் பொருளாகப் பயன்படுத்துவதற்கும் கூட இந்திய அரசு தடை விதித்துள்ளது. (33

### தமிழக தேர்தல் சூடுபிடிக்கிறது; கலைஞரின் பிரச்சாரம் ஆரம்பம்

தேர்தல் பிரச்சாரம் தமிழ்நாட்டில் சூடுபிடிக்கத்தொடங்கிவிட்டது

கருணாநிதி சாதி அடிப்

சேர்ந்தவர்களாலும் ஆதரிக்கப்பட்ட தி. மு. க. அரசை ஜனாதிபதி வெங்கட்ராமனுக்குப் பிடிக்கவில்லை, அதனா

ஆதீன முதல்வர் குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் பத்தாவதாண்டு குருபூசை இம் மாதம் இருபத்து மூன்றாம் திகதி சனிக்கிழமை நல்லை ஆதீனத்தில் நடைபெறவுள்ளது அன்று காலை எட்டு மணி முதல் யாகபூஜை, சங்காபிஷேகம், விஷேச பூசை முதலியன நடைபெற்று நண்பகல் பன்னிரண்டு மணிக்கு அன்னதானமும் நடைபெறும். பிற்பகல் இரண்டு மணிக்குப் பெரிய புராணபடனமும், தொடர்ந்து இசை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

## கல்வி அலுவலகத்தில் இட நெருக்கடி

வடமராட்சிக் கோட்டக் கல்வி அலுவலகம் தற்போது தற்காலிகமாக பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலையில் உள்ள கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

சம்பளக்கிளை ஆசிரியர் நிர்வாகக் கிளை ஊழியர்களும், நிதி உதவியாளர், நிர்வாக அதிகாரி ஆகியோரும், இங்கு மிகவும் சிறிய இடத்திலேயே சிரமத்தின் மத்தியில் கடமையாற்றி வருகின்றனர். (ப - 17)

யோருக்கும் கல்லூரியில் சிறப்பான முறையில் சேவைநலன் பாராட்டுவிழா ஒன்று அண்மையில் நடாத்தப்பட்டது.

## மாதிரிப் பரீட்சை இன்று நடைபெறும்

யாழ் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் இருந்து க. பொ. த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நன்மை கருதி யாழ் சைவ பரிபாலன சபையினரால் இன்று 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை மாதிரிப் பரீட்சை ஒன்று நடாத்தப்படவுள்ளது.

இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள். வினாத்தாள்கள் அனைத்தும் பரீட்சை மேற்பார்வையாளர்கள், பரீட்சை நிலைய அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைச் செயலாளர் சைவப் புலவர் கந்தசாமி அறிவித்துள்ளார். (12)

## விஞ்ஞான பீடத்திற்கு புதிய பீடாதிபதி

யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதியாக இரசாயனவியல் விரிவுரையாளராக இருந்த பேராசிரியர் எஸ். மகேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார். (74)

## பத்திரகாளி உற்சவம்

வட்டுக்கோட்டை, சங்கரத்தை பிட்டியம்பதி ஸ்ரீபத்திரகாளி அம்பாள் கோயில் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமை காலை 11 30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாட்கள் திருவிழா நடைபெறும்.

பகல் திருவிழா காலை 8 மணிக்கு ஆரம்பமாகி ஒரு மணிக்கு முடிவடையும்.

மாலைத் திருவிழா பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகி 6.30 மணிக்கு முடிவடையும்.

28 ஆந் திகதி மாலை 5.00 மணிக்கு சப்பரத் திருவிழாவும் 29 ஆந்திகதி பிற்பகல் 2 மணிக்கு பங்குனி உத்திரத்தில் அம்பிகையின் இரதோற்சவமும் 30 ஆந் திகதி காலை 10 00 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## மருதடி விநாயகர் உற்சவம்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 29 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. (13,30)

## போட்டிகள்

சதாவதானி கதிரைவேற்பிள்ளை குருபூசைத்தினத்தை யொட்டி, மேலைப்புலோலி சதாவதானி கதிரைவேல்பிள்ளை சனசமூக நிலையம் மாணவர்களிடையே பேச்சு, மனன, தேருக்கு நேர் வினா விடைப் போட்டி என்பவற்றை நடத்தவுள்ளது.

இம் மாதம் 30, 31, ஆம் திகதிகளில் நடைபெறும் இப் போட்டிகள் பாலர் பிரிவு முதல் மேற்பிரிவு உள்ளிட்ட உயர் பிரிவு வரை தனித்தனியாக நடத்தப்படும். (50)

## கற்பக விநாயகர் அலங்கார உற்சவம்

யாழ் கச்சேரியடி ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய அலங்கார உற்சவம் கடந்த 12 ஆம்திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

தினமும் பகல் 11 மணிக்கு அபிஷேக ஆராதனைகளும், பிற்பகல் 3. 30 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் இடம்பெறும்.

இம்மாதம் 21 ஆம் திகதி வியாழக்கிழமை விசேட சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

தேர்தல் பிரசாரம் தமிழ் நாட்டில் சூடுபிடிக்கத்தொடங்கிவிட்டது

கருணாநிதி சாதி அடிப்படையிலேயே தனது பிரசாரத்தைத் தொடங்கியுள்ளார். "சிறுபான்மையினராலும் பின் தங்கிய வகுப்பினராலும் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்களாலும் ஆதரிக்கப்பட்ட தி. மு. க. அரசை ஜனாதிபதி வெங்கட்ராமனுக்குப் பிடிக்கவில்லை, அதனாலேயே அரசைக் கலைத்தார் அவர் என கருணாநிதி தனது தேர்தல் பிரசாரங்களில் கூறி வருகிறார்.


மில்க்வைற் திரவ சவர்க்காரம்

சகல தேவை அழுக்கு நீக்கி

MILKWHITE LIQUID SOAP

All Purpose Dirt Remover

சாதாரண வீட்டுச் சலவைக்கு பாவிக்கும் முறை

1. ஒரு லீற்றர் நீரில் பத்து மேசைக்கரண்டி மில்க்வைற் திரவ சவர்க்காரத்தை ஊற்றவும்.
2. நுரை செறிந்திட நீரைக் கலக்கவும்.
3. கலவையுள் ஈரத் துணியை அமிழ்த்திக் கலவை துணியில் செறியச் செய்யவும்.
4. பத்து நிமிடத்தில் துணியைச் சுத்த நீரில் நன்றாக அலசி எடுக்கவும்.
5. சலவை செய்யும் துணிகளின் எண்ணிக்கைக்கும் பொலிவுக்கும் ஏற்ப அளவில் மாற்றஞ் செய்யவும்.

மாவட்டத்தில் சகல ப. நோ. கூ. சங்கங்களிலும் கடைகளிலும் விற்பனையாகிறது.

1 போத்தல் ரூ. 90/-
½ போத்தல் ரூ. 45/- 03065

# 'நீதியைப் பணயம்வைத்து ஒருமைப்பாட்டைப் பேண தென்பகுதிமக்கள் முனைகிறார்கள்'

தெற்கிலுள்ள மக்கள் ஒருமைப்பாட்டைப் பற்றி தவறான கருத்தைக் கொண்டுள்ளதாக இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் முக்கியஸ்தரும், திருச்சபையின் உலகளாவிய அமைப்புக்கள் பலவற்றில் அங்கம் வகிப்பவரும், யாழ் புனித சவேரியார் பெரிய குருமட அதிபருமான இறையியல் கலாநிதி அருட்திரு எஸ்.ஜே. இம்மனுவல் தெரிவித்துள்ளார்.

பத்திரிகையொன்றிற்கு இவர் அளித்துள்ள பேட்டியொன்றில் "தெற்கிலுள்ள மக்கள் நீதியைப் பணயம் வைத்தாவது ஒருமைப்பாட்டையும், ஜனநாயகத்தையும் 'பேண'வேண்டுமென்று நினைக்கிறார்கள் இதற்காக கண்மூடித்தனமாக எதையும் செய்யவும் அவர்கள் தயாராக இருக்கிறார்கள்".

"அத்தகைய ஒருமைப்பாட்டை நாம் விரும்பவில்லை. சிறுபான்மை மக்களுக்கும் நீதி, சமத்துவம், பாதுகாப்பு இடைக்கும் போதுதான் ஜனநாயகம் பயனுள்ளதாக இருக்கும்" என அருட்திரு இம்மானுவல் மேலும் தெரிவித்துள்ளார். (16)

## 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' ஒத்துழைப்புக் கோருகிறார்கள் புலிகள்

எதிர்வரும் சித்திரை மாதம் நடைபெறவிருக்கும் மாபெரும் முத்தமிழ் விழாவை முன்னிட்டு யாழ் மாவட்டத்தில் உள்ள வ்யாபார ஸ்தாபனங்களின் பெயர்ப் பலகைகளைத் தமிழில் மாற்றியமைக்கு மாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் மொழியைக் கொச்சைப்படுத்தும் வகையில் அமைந்துள்ள ஆங்கிலப் பெயர்களையும், ஆங்கிலப் பதங்களையும், தமிழில் மாற்றியமைக்கும்படியும், கோரப்பட்டுள்ளது.

அதற்கு தமிழ் பெயர் தேவையானவர்கள் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ் மாவட்ட கலைகலாசாரப் பிரிவினருடன் தொடர்புகொள்ளுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ப 5,53)

## காயமடைவோருக்கு உதவ ஊரெழுவில் அம்புலன்ஸ் சேவை

வலிவடக்குப் பகுதியில் இராணுவ நடவடிக்கையால் காயமடைவோர் அவசர சிகிச்சை பெற ஊரெழு பிள்ளையார் கோவிலில் உள்ள செஞ்சிலுவைச் சங்க அம்புலன்ஸ் வண்டியின் உதவியைப் பெற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அம்புலன்ஸ் சேவை கடந்த வாரம் முதல் முழு நாள் சேவையில் ஈடுபடுத்தப் பட்டு வருவதாகச் சம்பந்தப் பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (ப.11)

## அன்னை திரேசா ரஷ்யா செல்கிறார்



அன்னை திரேசா மேமாதம் சோவியத் ரஷ்யாவுக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இவர் மாஸ்கோவில் சோவியத் தலைவர் மிக்காயில் கொர்பசேவைக் கண்டு உரையாடவுள்ளார்.

இதன் மூலம் கம்யூனிஸ்ட் நாடான அங்கு பெருமளவில் சமூகச் செயற்பாட்டில் மக்கள் ஈடுபடுவதற்கு தூண்டுதல் ஏற்படுமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (16)

## தரம் மூன்றிற்கு விண்ணப்பிக்கலாம்

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் 3 ஆம் தரத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விவரங்கள் அடங்கிய வர்த்தமானி தற்பொழுது யாழ் கல்வித் திணைக்களத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

விண்ணப்ப முடிவு திகதியை மேலும் நீடிக்கச் செய்வதற்கான நடவடிக்கையினை யாழ் கல்விப் பணிப்பாளர் எடுத்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (70)

## கடலில் கடற்படை அட்டகாசம் தொழிலுக்குச்செல்ல மீனவர் அச்சம்

வல்லைப்பகுதியில் இருந்து தொழிலுக்காக கடலுக்குச் செல்லும் மீனவர்கள் கடற்படையினரின் இம்சைக்கு உள்ளாகும் சம்பவங்கள் சமீப நாட்களில் அதிகரித்துள்ளன.

சில தினங்களுக்கு முன்னர் இப்பகுதியிலிருந்து கடலுக்கு சென்ற இரு மீனவர்கள் கடற் தொழிலுக்குச் செல்ல அஞ்சுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (22)

## ஈழத்தமிழர் அரசியல்வரலாற்றினை சகலமாணவரும் அறியவாய்ப்பு

தனியார் கல்வி நிறுவன ...

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் அர்ச்சுனா அலுவிஹார தெரிவித்த கருத்துக்களையொட்டி (முரசொலி) விளக்கம் தேவைப்படவே, துணைவேந்தர் பேராசிரியர் அ.துரைராஜாவை அணுகினேன். தமிழினத்தின் அதியுயர் கல்வி நிறுவனத்தை நிர்வகிப்பதில் ஓய்வொழிச்சல் இல்லாது பாடுபடும் இப் பெரியோரை நான் சந்திக்கும்போது நேரம் இரவு 7.30 பகல் முழுதும் வேலை செய்த களைப்போ, சலிப்போ இன்றி உற்சாகமாக, மலர்ந்த முகத்துடன் உரையாடினார் துணைவேந்தர்.

# 'கல்வியை வேலைவாய்ப்போடு போட்டுக் குழப்பக்கூடாது!'

-- துணைவேந்தர் துரைராசா

கே: பல்கலைக்கழகத்தில் கற்கும் தகுதி பெற்றிருந்தும், ஏராளமான மாணவர்களுக்கு அவ் வாய்ப்பு மறுக்கப்படுகிறது. உதாரணமாக 1988 இல் 30,000 மாணவர்கள் தகுதி பெற்றிருந்தும் 6500 மாணவர்களே அனுமதிக்கப்பட்டனர். மற்ற மாணவர்கள் உயர் கல்வி வாய்ப்பை இழந்துள்ளனர். கல்வி கற்கும் உயர் கல்வி வசதி பெறாத மாணவர்களுக்கு ஏமாற்றமும், விரக்தியும் ஏற்படுகின்றன. இது பற்றித் தங்கள் கருத்து என்ன?

ப: அனுமதி கிடைக்காத மாணவர்களுக்கு விரக்தியும், ஏமாற்றமும் ஏற்படுவது இயல்பு. 1965 இல் 5000 மாணவர்கள் அனுமதிக்கப் பட்டனர். 1988 இல் 6500 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர். 1965 இல் 4 பல்கலைக்கழகங்கள் இருந்தன 1988 இல் 8 பல்கலைக்கழகங்கள். இதை விட திறந்த பல்கலைக்கழகமும் உண்டு. பல்கலைக் கழகங்களின் தொகை கூடினாலும் அனுமதிக்கப்படும் மாணவர்களின் தொகை கூட வில்லை. கல்வியானது ஒவ்வொரு பிரஜையினதும் அடிப்படை உரிமை. வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள ஒரு பிரஜையும் தன் பிள்ளை கல்வி கற்க வேண்டும் என விரும்புகிறான். ஒவ்வொரு தாயும், அவள் ஏழையோ, பணக்காரியோ தனது பிள்ளை படித்துப் பட்டம் பெற வேண்டும் என்றே விரும்புகிறாள். இதற்குத் தடையாக இருப்பது ஜனநாயக விரோதமாகும் ஏனெனில், இது அடிப்படை உரிமையை மறுக்கும் செயலாகும்.

### கல்வியினால் உயர்வு

கல்வியைப் பற்றி ஒரு விடயம் சொல்ல வேண்டும். இலங்கையைப் பொறுத்தவரை கல்வி ஒருவரின் அந்தஸ்தைக் காட்டும் அம்சமாக இருக்கிறது. கல்வி கற்றவனுக்கு சமுதாயம் மதிப்பளிக்கின்றது.

இப்படியான கல்விச் செல்வத்தைத் தனது பிள்ளை பெறவேண்டும் என ஒவ்வொரு தாயும் விரும்புவது இயல்பே.

கே: மிகவும் தெளிவான பதில் தந்திருக்கிறீர்கள். மிகவும் நன்றி இந்தப் பிரச்சினைக்கு மாற்று வழி இல்லையா?

### விரும்பத்தகாத நடைமுறை

ப: வழி வகைகள் இருக்கின்றன. நான் மேலே சொன்ன விபரங்கள் பற்றி இன்னும் விளக்குகிறேன். 1988 இல் 18000 மாணவர்கள் விண்ணப்பித்தனர். அதில், 1/3 பங்கு மாணவர்கள் தான் 8 பல்கலைக் கழகங்களிலும் அனுமதிக்கப்பட்டார்கள். இப்படி வேறு எந்த ஒரு நாட்டிலும் நிகழ்வதில்லை. இது ஒரு விரும்பத்தகாத நடைமுறை. யாழ் பல்கலைக்கழகங்களைப் பொறுத்தவரை 1988 இல் ...

(Distance Education) மூலமாகவும் மேலதிகமாக அனுமதிக்கப்படும் மாணவர்களுக்கு கல்வி புகட்டலாம்.

### தொலைக் கல்வி

கே: தொலைக்கல்வி பற்றிக் குறிப்பிட்டீர்கள். இதுபற்றி விளக்கமாகக் கூறுவீர்களா?

ப: திறந்த (Open university) பல்கலைக் கழகத்தில் டிப்ளோமா பாடநெறி (Diploma Course) பட்டதாரிச் சான்றிதழ். ஆகியன தொலைக்கல்வி முறை மூலம் கற்பிக்கப் படுகின்றன. பொறியியல் பீடத்தைப் பொறுத்தவரை டிப்ளோமா பாடநெறி (Diploma Course) பட்டதாரிச் சான்றிதழ், மின் பொறியியல் (Electrical Engineering) மின் அணு பொறியியல் Electronic Engineering இயந்திரப் பொறியியல் (Mechanical Engineering) சிவில் பொறியியல் (Civil Engineering ஆகியதுறைகளில் தொலைக் கல்வி மூலம் பாடங்கள் கற்பிக்கப் படுகின்றன. இத் தொலைக்கல்விச் சேவையைச் செயற்படுத்துவதற்கு இலங்கையில் 4 பிரதேச நிலையங்கள் உண்டு. யாழ்ப்பாணத்தில் ஒரு பிரதேச நிலையம் உண்டு. இது கொக்குவிலில் அமைந்துள்ளது. இத்துடன் 11 கற்கை நிலையங்களும் உண்டு

நேரடியாக விரிவுரைகள் நடத்துவதற்குப் பதிலாக, பாடங்கள் (modules) அச்சடிக்கப்பட்டு அனுமதிக்கப்படுகின்றன. இது சில ரியூட்டறிகள் செய்வது போன்ற தபால் மூலம் கல்வி எனக் கருதக்கூடாது (Postal -Tuition) ஒவ்வொரு மாணவ மாணவிக்கும் பாட நெறிகள் நடக்கும்போது ஒப்படைகளும் (Assignment) அனுப்பப்படும். இதை அவர்கள் செய்து திறந்த பல்கலைக் கழகத்திற்கு அனுப்புதல் வேண்டும். அவற்றை விரிவுரையாளர்கள் திருத்தி, அத்துடன் சரியான விடைகளையும் இணைத்து அனுப்புவார்கள். இதை விட எங்கு செயல்முறை Practical) வசதியுள்ளதோ அங்கு அவர்கள் செய்வதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்படும்.

### கல்லூரிகளின் செயற்பாடு

கே: பல்கலைக் கழகக்கல்லூரிகள் ஸ்தாபிப்பதன் மூலம் அதிகமான மாணவர்களுக்கு உயர் கல்வி வசதி அளிக்கலாம் எனக் கூறினீர்கள். இந்தப் பல்கலைக் கழகக் கல்லூரிகளினது செயற்பாடு அதன்அந்தஸ்து நிர்வாக மேற்பார்வை ஆகியனபற்றிச் சொல்லுவீர்களா?

சென்ற இரு மீனவர்கள் கடற்படையினரின் சூட்டுக்கு உள்ளாகி மரணமாகியிருந்தனர், ஐவர் காணாமல் போயிருந்தனர்.

கடற்படையினரின் அச்சுறுத்தல் தொடர்வதால் வல்வைப் பகுதி மீனவர்கள் கடலுக்கு

தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தினால் தனியார் கல்வி நிறுவனங்களில் அரசியல் நிலைப்பாடுபற்றிய வகுப்பொன்று நடாத்தப்பட வேண்டுமென கேட்கப்பட்டுள்ளது.

நேர அட்டவணை தயாரிக்கப்பட்டு அதன்படி இவ்வகுப்பினை அரசியலில் திறமை கொண்ட ஆசிரியர் மூலம் நடாத்தவேண்டும்.

இதன்மூலம் மாணவர்கள் ஈழத்தமிழ்மக்களின் அரசியல் வரலாறினை அறிந்துகொள்ள முடியும்.

அத்துடன்சிரமதானம், முதலுதவி போன்றவற்றிலும் கல்வி நிறுவனங்களின் ஆசிரியரும் மாணவரும் பங்கேற்க வேண்டும்.

(30)

# ‘பதுங்குகுழிகளை புதுப்பியுங்கள்’

## மக்கள் முன்னணி கோரிக்கை

தமிழீழ மக்கள் தத்தமது வீடுகளில் பதுங்குகுழிகளை அமைக்க வேண்டியதன் அவசியத்தினை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் மீண்டும் வலியுறுத்தி வருகின்றார்கள்.

அத்துடன் பொது இடங்களிலும், தெருவோரங்களிலும் பதுங்குகுழிகள் ஏற்படுத்தப்பட வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது.

தற்போது ஸ்ரீலங்கா குண்டுவீச்சு விமானங்கள் எதுவித இலக்குமின்றி கண்டபடி குண்டுவீச்சுகளை நடாத்துவதால் மக்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கருத்தரங்குகள் மூலம் கேட்கப்பட்டு வருகின்றனர்.

(30)

# பயன்படுத்தாத புகையிரதச் சீட்டுக்களின் பணத்தை மீளப் பெறலாம்

முன்கூட்டியே புகையிரத பிரயாணச் சீட்டுக்களைப் பெற்று ஜூலை அசம்பாவிதத்தையடுத்து அதனைப் பயன்படுத்த முடியாமல் போனவர்கள் அதற்குரிய பணத்தை மீளப்பெற முடியுமென அறிவிக்கப்படுகின்றது.

இத்தகைய சீட்டுக்களை வைத்திருப்போர் அவற்றை ஒரு விண்ணப்பத்துடன் இணைத்து பணத்தைத் திரும்பத்தரும்படி கேட்டு,

வர்த்தக அத்தியட்சகர், அலுவலகம், இலங்கை புகையிரத் தலைமைச் செயலகம், கொழும்பு - 10 என்ற முகவரிக்கு எவர் மூலமாவது ஒப்படைத்து முழுக்கட்டணத்தையும் மீளப்பெற முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கலைக்கழகத்தைப் பொறுத்தவரை 1988 இல் 811 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டார்கள். 1989 இல் 1057 மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

### பல்கலைக் கழகக் கல்லூரிகள்

இந்தக் குறைபாடுகளை ஓரளவிற்காவது நிவர்த்தி பண்ணும் வகையில் பல்கலைக் கழகக் கல்லூரிகள் நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதே நேரம் ஏற்கனவே உள்ள சம்பிரதாய பல்கலைக் கழகங்களின் (Conventional Universities) தொகையையும்கூட்ட வேண்டும். அதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படுகின்றன. இதனைக் கருத்திற் கொண்டுபல்கலைக் கழகமானியங்கள் ஆணைக்குழுபல்கலைக்கழக அனுமதியை அதிகரித்துள்ளது 1989 இல்நடைபெற்ற G.C E A/L பெறுபேறுகளில் இருந்து அனுமதிக்கப்படும் மாணவர்களின் தொகையை 30 சதவிதத்தால் கூட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. இப்படி அதிகரிக்கும் போது, தற்போது நடைமுறையில் உள்ள கல்விபுகட்டும் முறையில் மாற்றம் எதுவும் இன்றி இருத்தல் அவசியம். கூடிய மாணவர்கள் அனுமதிக்கப்படும் போது, கூடிய விரிவுரையாளர்கள் ஆய்வு கூடவசதிகள், உபகரணங்கள் விரிவுரை மண்டபங்கள் (Lecture Hall)போன்ற அத்தியாவசிய தேவைகள் இருக்கின்றன. இவையாவும் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். இந்தத் தேவைகள் உடன் பூர்த்தி செய்யப்படாவிடத்து, கற்கை நெறிகளில் உரியவகையில் மாற்றங்கள் செய்தும், தொலைக்கல்வி

ப. ஒவ்வொரு மாகாணத்திலும் ஒரு பல்கலைக்கழகக் கல்லூரி நிறுவப்படும். இந்தப் பல்கலைக்கழகக் கல்லூரிகள் பல்கலைக்கழகங்களினால மேற்பார்வை செய்யப்படும். வடமாகாணத்திற்குரிய பல்கலைக்கழகக் கல்லூரி வவுனியாவிலும், கிழக்கு மாகாணத்திற்குரிய கல்லூரி அம்பாறையிலும் நிறுவப்படும். இது அரசின் தீர்மானம்.

இந்தக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்படும் போது ஆரம்பத்தில் போதிய வசதிகள் இல்லாது போகலாம். வசதிகள் என்று நான் குறிப்பிடுவது, உபகரணங்கள், தளபாடங்கள், ஆய்வு கூடங்கள், விரிவுரை மண்டபங்கள் ஆகியவற்றையே. போதுமான விரிவுரையாளர்களும் இல்லாது இருக்கலாம். ஆனால் இக்குறைபாடுகளுக்கெல்லாம் மாற்று வழிமுறைகள் கண்டு பல்கலைக்கழகக் கல்லூரிகளை இயங்க வைப்பதே எமது நோக்கம். எங்கள் மாணவ சமுதாயத்தின் வளர்ச்சிக்காக நாம் எவ்வகையில் கஷ்டப்பட்டாவது கல்வி புகட்டத் தயாராக இருத்தல் வேண்டும்.

### பட்டதாரிகளும் வேலையில்லாப் பிரச்சினையும்

கே: நாட்டில் ஏற்கனவே வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது. கூடிய பட்டதாரிகளை மேலும் உருவாக்குவதினால் இப்பிரச்சினை மேலும் அதிகரிக்காதா?

தொடரும்

## முல்லைத்தீவுப் பகுதியில் வயிற்றோட்டம் பரவுகிறது

முல்லைத்தீவில் வயிற்றோட்ட நோயினால் பலர் பாதிக்கப்பட்டு வருகின்றதாக வைத்திய வட்டாரங்களிலிருந்து தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், உடையார்கட்டுப் பகுதியில் இது வேகமாக பரவிவருகிறது. இந்நோய்க்கு ஆளாகிய சிலர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கான மருந்துகள் போதியளவு இல்லாததினால் மேலும் பலர் பாதிக்கப்படுவதாக அஞ்சப்படுகிறது.

மக்களை சுகாதாரப் பழக்கங்களைக் கைக்கொள்ளுமாறும் சுகாதாரப்பகுதியினர் அறிவுறுத்திவருகின்றனர். (38,74)

## ஔவையார் அருளிய நூல்கள் இலவசமாக விநியோகம்

மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டு பருத்தித்துறை விநாயகர் தருமநிதியம் ஔவையார் அருளிய அறநெறி மணிகள் என்னும் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி ஆகியவைகள் அடங்கிய நூலொன்றை அச்சிட்டு பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கியுள்ளது.

இந்நூலைக்கற்ற மாணவர்களுக்கான வினைத்திறன் போட்டிப் பரீட்சை யொன்றையும் இத்தரும நிதியம் நடாத்தி சித்தி பெறுபவர்களுக்கு 1-ஆம் பரிசாக 3000 ரூபாவையும், 2-ஆம் பரிசாக 2000 ரூபாவையும், 3-ஆம் பரிசாக 1000 ரூபாவையும் வழங்கவுள்ளது.

இதற்கான போட்டிப் பரீட்சை அடுத்த மாதம் நடைபெறும் என்றும் விநாயகர் தருமநிதியம் அறிவித்துள்ளது. (15)

## மருதங்கேணி ஆஸ்பத்திரியில் நோயாளிகளுக்கு உணவு இல்லை

மருதங்கேணி வைத்தியசாலையில் வாட்டில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு கடந்த மூன்று மாதங்களாக உணவு வழங்கப்படுவதில்லை என்று நோயாளிகள் தெரிவிக்கின்றனர்.

வைத்தியசாலைக்கு உணவு வழங்குவதற்கு ஒப்பந்தம் கைச்சாத்திட்ட ஒப்பந்தக்காரர் அசிரத்தையாக இருப்பதினாலேயே தாமதம் ஏற்பட்டு வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை மருந்துகளுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (43

## வடமராட்சிப் பகுதியில் நிர்ணய விலையில் பாண்

வடமராட்சிப் பகுதியில் பாண் 11 ரூபாவாக விற்பனை செய்யப்படும் என வடமராட்சி பேக்கரியாளர் சங்கம் அறிவித்துள்ளது.

11 ரூபாவாக விற்பனை செய்யப்பட வேண்டிய பாண் 850 கிராமாக இருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை மீறும் வியாபாரிகள் பேக்கரிக்காரர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் 2500 ரூபா அபராதம் விதிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (50)

### மனித...

தமது அரசியற் கடமையைச் செய்யமுடியாது போனதாகவும் மனுவில் தெரிவிக்கப்பட்டது.

வழக்கை விசாரித்த மூன்று நீதிபதிகளும் ஒவ்வொரு மனுதாருக்கும் நட்டஈடாக பத்தாயிரம் ரூபாவும் செலவுத் தொகையாக 1750 ரூபாவும் செலுத்துமாறு தீர்ப்பு வழங்கினர்.

### வடக்கே...

யப்பட்டு வருகிறது.

நெருக்கடியான சூழ்நிலை ஆரம்பமானதையடுத்து விவசாயிகள் அதிக கூலிகொடுத்து பயிர்ச்செய்கை உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர்.

எரிபொருள், உரவகைகளுக்கும் கூடுதலான விலை கொடுத்து மரக்கறி வகைகளை உற்பத்தி செய்தபோதி

மறுமலர்ச்சிக் கழக ஆண்டு விழாவில் மாத்தயா:

# எமது விடுதலைப் போராட்டம் மாணவர் பங்களிப்பை நாடிநிற்கிறது

"இன்றைய நிலையில் மாணவர்கள் மாணவர்களாகவே இருக்க வேண்டும். போராட்டத்திலிருந்து விலகி வெளியே நிற்க வேண்டும் என்ற கருத்தொன்று நிலவுகிறது. அக்கருத்து தவறானதாகும் மாணவர்கள் சமூகத்தில் ஒரு அங்கம் இன்று எமது சமூகத்திற்கு விடிவு தேவைப்படுகிறது."

நேற்று நடைபெற்ற மறுமலர்ச்சிக் கழக 11-வது ஆண்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவரும் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணித் தலைவருமான கோ. மகேந்திரராசா தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர்; சிங்களப் பேரினவாத அரசு எம் தேசத்தின் மீது ஒரு இன அழிப்பு நடவடிக்கையை மேற்கொண்டு வரும் இன்றைய நிலையில் எம்மிடம் தேசம் என்ன எதிர்பார்க்கிறது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இன்றைய சமூகம் மாணவரின் பங்களிப்பை வேண்டி நிற்கிறது. நாங்கள் தமிழர்கள் ஒரு தனித்துவமான இனத்தவர்கள். எம்மீது ஒரு தாங்க முடியாத அடக்குமுறையை சிங்கள இனவாத அரசு கட்டவிழ்த்து விட்டுள்ளது.

அடக்கி ஒடுக்கப்படும் எம் இனத்தவர்களுக்கு சார்பாக போராட வேண்டிய கடப்பாடு எல்லாருக்குமே எழுகிறது. மக்களின் பங்களிப்பே விடுதலைப் போராட்டத்தின் வெற்றியைத் தீர்மானிக்கும். நாம் ஓர் உன்னதமான இனம்.

ஆகவே மாணவர்களே இன்று எங்கள் தேசம் தனது விடுதலைக்காக உங்களின் பங்களிப்பை நாடி நிற்கின்றது இதற்கு உங்களின் பதில் என்ன என்பதை தேசம் எதிர்பார்த்து நிற்கிறது என்று அவர் கூறினார்.

இவ் ஆண்டு விழாவில் பாலகுமார், துணைவேந்தர் துரைராஜா மற்றும் பேராசிரியர்களும் கலந்து கொண்டனர். மறுமலர்ச்சிக் கழகத் தலைவர் க. சத்தியநாதன் தலைமையில் இவ்வைபவம் இடம்பெற்றது (74)

## 1989-90 வேலைத்திட்டத்திற்கு அரசு அங்கீகாரம் வழங்கியுள்ளது

யாழ் மாவட்டத்தில் 1989-90 ஆம் ஆண்டு காலப் பகுதிக்குரிய பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்படாதுள்ள வேலைத் திட்டங்களை இந்த ஆண்டில் நடைமுறைப்படுத்த அரசு அங்கீகரித்துள்ளது.

யாழ் அரச அதிபர் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்தே இதற்கான அனுமதி வழங்கப்பட்டதுடன் நிதியும் வழங்கப்பட்டுள்ளது.

கட்டிட நிர்மாணங்களைப் பொறுத்த மட்டில் இதற்கான மூலப் பொருள்களைப் பெறுவதில் சிரமங்கள் இருப்பதனால் இதனை நிறைவேற்ற முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (66)

## காணிப்பதிவு உறுதி பிரதிகள் வழங்க முடியாத நிலை

யாழ் மாவட்டத்தில் காகிதாதிகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடுகள் காரணமாக காணிப்பதிவு அலுவலகத்தினால் காணிப்பதிவு, உறுதிகள் ஆகிய ஆவணங்களின் பிரதிகளைவழங்க முடியாதுள்ளது.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாகப் பாதிப்படைந்த வீடுகளைத் திருத்தியமைக்க வங்கிகள் மூலம் கடன் வழங்கும் திட்டத்தைப் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு அமுல் படுத்தியுள்ளது.

இவ்வாறான கடனைப் பெற காணி உறுதிகளின் பிரதிகளை வங்கிகள் கோரியுள்ளதனையடுத்து பலர் இதனைப் பெற காணிப்பதிவு அலுவலகத்திற்கு விண்ணப்பித்துள்ளனர்.

இதேவேளை கோட்டை முழுத்தாள்களுடன் விண்ணப்பம் செய்பவர்களுக்கு இதனை இந்த அலுவலகம் உடனுக்குடன் வழங்கி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (66

## குடாநாட்டுத் தபால்கள் தினமும் விநியோகம்

குடாநாட்டுக்குள் தபாற் சேவையை இன்றுமுதல் சீராக நடாத்த தபாற் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதன்படி ஒரு நாளில் தபால்களைப் பொதுமக்கள் பெற்றுக்கொள்ள முடியும் எனச் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ் வாரம் முதல் யாழ் பிரதம தபாற் கந்தோரிலிருந்து தினமும் குடாநாட்டின் முக்கிய தபாலகங்களுக்கு ஊழியர்கள் இவற்றை சைக்கிளில் எடுத்துச் செல்வார்கள்.

அதேபோல இந்த ஊழியர்களினால் அந்தந்தத் தபாற்கந்தோரிலிருந்து தினமும் தபாற் பொதிகள் யாழ் பிரதம தபாலகத்துக்கு எடுத்துவரப்படும். (33)

### நல்லூர்...

எமது செய்தியாளருக்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்வாறான சேவையை நகரப் பகுதி பாடசாலைகள் தேவையெனக் கருதி எமது சங்கத்தைக் கேட்டால் நடமாடும் சேவை மூலம் இதனை நிறைவேற்ற முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (66)

### முல்லைத்தீவு...

மாகத் தாக்கப்பட்டு வருவதோடு மீனவர்களை படகுகளுடன் கடலில் மூழ்கடிக்கப்

### மலசலகூடம் இல்லாத பாடசாலை

பயிலுநர் ஆசிரியர்களின்

## நியமனங்கள் முடிவடைந்தும் தெரிவுகுறித்து ஆட்சேபனை

பயிலுநர் ஆசிரியர் நியமனங்கள் முடிவடைந்து ஒன்றரைவருடங்கள் தாண்டிவிட்டபோதிலும் அதனால் தோன்றிய பிரச்சினைகள்பலவற்றை இன்னும் தீர்த்துவைக்க முடியாது கல்வி அமைச்சு தடுமாறிவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

நாடு முழுவதிலுமிருந்து 1989, 90 காலப்பகுதியில் 35,000 பயிலுநர் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

ஆனால் இந்த ஆசிரியர்களின் தெரிவுகளை ஆட்சேபித்து இதுவரை ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கல்வி அமைச்சுக்கு கிடைத்துள்ளனவாம் (74)

## நேர்முகப் பரீட்சை கடிதங்கள் காலதாமதமாக வந்தன

திறமை, மூப்பு அடிப்படையில் இலங்கைப் பாடசாலை அதிபர் சேவையில் தரம் I க்கு (இரண்டுக்கு) பதவி உயர்வு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை ஒன்று அரசாங்க சேவை ஆணைக்குழு

காலாவதியான பின்னரே கிடைத்துள்ளதாக அதிபர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நேர்முகப் பரீட்சைக்கான திகதிகள் காலாவதியாகியுள்ளதால் இப்பரீட்சைக்கான புதிய திகதிகள்

னர்.

**ஆனையிறவு ...**

நோக்கியும் ஷெல் தாக்குதல் நடத்தப்படுகின்றது.

இயக்கச்சி சங்கத்தாவயல் புதுக்காடு, கோயில் வயல், மண்டளாய் ஆகியபகுதிகளை நோக்கியே அண்மையில் சில தினங்களாக அடிக்கடி தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அத்துடன் ஹெலிகளும் இக் குடியிருப்புப் பகுதிகளில் வேட்டுக்களைத் தீர்க்கின்றன.

**இரணைதீவு ...**

பலமாகத் தாக்கப்பட்டதாகவும் இவர்கள் தெரிவித்தனர்.

வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார், பூநகரி பகுதிகளைச் சேர்ந்த இவர்கள் இம்மாதம் 9 ஆம் திகதி விடுவிக்கப்பட்டனர்.

தலைமன்னாரில் இருந்து ஹெலிகப்டர் மூலம் அனுராதபுரம் கொண்டுசெல்லப்பட்டு விசாரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப 35)

கொடுத்து மரக்கறி வகைகளை உற்பத்தி செய்தபோதிலும் உற்பத்திக்குரிய செலவைக்கூட எட்டிப்பிடிக்க முடியாத அளவுக்கு விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளமை விவசாயிகளை கவலையில் ஆழ்த்தியுள்ளது. (38,50)

**கிழக்கின் ...**

குழுக்களால் கடத்தப்பட்டவாகளாவர்.

காணாமல் போனவர்களில் 99 சதவீதத்தினர் ஆண்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது

**வடக்கு—**

கப்பட்டுவருகிறது.

ஆனால் வறுமையில் வாடும் ஜனசக்தி பெறுவோருக்கு எதுவித விநியோகமும் நடைபெறவில்லை,

நாட்டில் 'ஜனசக்தி' திட்டம் திறமையாக நடைபெறுவதாகக் கூறும் அரசு வடக்கு கிழக்கு மக்களை புறக்கணித்துவிட்டதாக பாதிக்கப்பட்டோர் தெரிவிக்கின்றனர் (16)

களுக் கடலில் மூழ்கடிக்கப் படும் வருவதாக தெரிவிக்கின்றனர்.

இதுவரை கைது செய்யப்பட்ட சிலர் திருமலை கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (38)

**துரைமார்க்கமாக—**

அரச அலுவலகங்களுக்கும் பொதுமக்களுக்கும்பல அசௌகரியங்கள் ஏற்படுவதாலும் கொழும்பு பிரதம தபாலகத்தில் வெளிநாட்டுத் தபால்கள், பார்சல்கள் நாள்கணக்காக தேங்கியுள்ளதாலுமே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி வவுனியாவுக்கு ரயிலில் வரும் கடிதங்கள் அங்கிருந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் பகுதிகளுக்கு வாகனத்தின் மூலம் கொண்டுவர ஆலோசிக்கப்படுகிறதாம். (33)

**படகு ...**

நீந்திக் கரை சேர்ந்தவர் வத்திராயனைச் சேர்ந்த ரதி பழகன் (19) என்றும் இளைஞராவர். (43)

**பாடசாலை**

துன்னாலை தெற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் மலசலகூடம் இன்மையால் மாணவர்களும் ஆசிரியர்களும் பெரிதும் அவதியுறுகின்றனர்.

இருநூறு மாணவர்களையும் ஆறு ஆசிரியர்களையும் கொண்ட இப்பாடசாலையில் மலசலகூடம் இன்மையால் அயல் வீடுகளுக்கு இவர்கள் செல்லவேண்டியுள்ளது.

## விசர்நாய்களின் தொல்லை

முல்லைத்தீவில் விசர் நாய்களின் தொல்லை வெகுவாக அதிகரித்துள்ளது. இப்பகுதியில் கட்டாக்காலி நாய்களும் பெருகி வருகின்றன.

இப்பகுதியில் இடம்பெயர்ந்தவர்களது நாய்கள் உணவு இன்றியும் கடும் உஷ்ணத்தினாலும் விசர் பிடித்து அலைகின்றன.

இவ்விசர் நாய்களின் கடிக்கு இலக்கான சிலர் உரிய மருந்துகள் தடுப்பூசிகள் இல்லாததினால் ஆபத்தான நிலையில் இருப்பதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன. (38

சாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவினால் இம் மாதம் நடாத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்ட கடிதங்கள் திகதிகள்

## வீமன்காமத்தில் மோதல்

நேற்று முன்தினமிரவு எட்டு மணியளவில் வீமன்காமம் காவரணில் இருந்து இராணுவத்தினர் வெளியேற முயன்றனர். இவர்கள் மீது புலிகள் அருள் 89 தாக்குதலை மேற்கொண்டனர். இதனையடுத்து இராணுவத்தினர் காவலரணுக்கு பின்வாங்கிச் சென்றனர். (71)

## செய்தி பிரசுரிக்க அனுமதி தேவை

யாழ் தாதிமார் பயிற்சிப் பாடசாலை, மாணவர்கள் நிர்வாகம் பற்றிய செய்திகளை பத்திரிகைகளில் பிரசுரிக்கும் முன்னர் பணிப்பாளரின் அனுமதி பெற்று பிரசுரிக்குமாறு தாதியர் மாணவர் மன்றத் தலைவரும், பணிப்பாளரும் அறிவித்துள்ளனர்

சைக்கான புதிய திகதிகள் அறிவிக்கப்படுமா எனவும் தொடர்புடைய அதிபர்கள் கேட்டுக்கொள்கின்றனர் (1

## கடற்படை சூட்டு ஒருவர் காயம்

புங்குடுதீவு குறிகாட்டுவான் நடுவுத்துருத்தி கடல் முனைப் பகுதியில் நேற்று முன்தினம் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தகப்பனையும், மகனையும் நோக்கி நயினாதீவு கடற்படையினர் சரமாரியாகச் சுட்டனர்.

அம்மீனவர்கள் வள்ளத்தைக் கைவிட்டு விட்டு கடலில் பாய்ந்து நீந்திக்கரையை வந்தடைந்தார்கள். ஒருவர் காயமடைந்துள்ளார். (20)

## விவசாயிகளுக்கு உதவி

சுன்னாகம் தெற்கு சிவபூசாவர் சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம் அப்பகுதி விவசாயிகளுக்கு உரம் விதைகள், 5 லீற்றர் மண்ணெண்ணெய் என்பனவற்றை கட்டம் கட்டமாக வழங்கி வருகிறது. (48)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு 'டச்சு வீதி, ஈஸ்வரபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 17-08-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது